தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, JULY 18, 2025
வெள்ளிக்கிழமை 18, ஜுலை 2025 | ஒளி: 10 கதிர்: 286 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



# ஷாருக் கான் வரமாட்டார்

சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ் ஸ்ரீ லங்காவின் திறப்பு விழா ஆகஸ்ட் 2ஆம் திகதி அன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அதில் பாலிவூட் நடிகர் ஷாருக் கான் வருகைதருவதாக இருந்தார்.

எனினும், எதிர்பாராத மற்றும் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணங்களால் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள மாட்டார் என்று ஏற்பாட்டாளர்கள் உறுதிப்படுத்தினர்.

தொடர்ச்சி P2

## செம்மணி புதைக்குழி:

# “அனுர அரசுக்கு ஓர் அக்னி பரீட்சை”

தோண்ட, தோண்ட வெட்டிச் சாய்க்க பட்ட அப்பாவி தமிழ் பெண்களின், குழந்தைகளின், பொதுமக்களின் எலும்புக் கூடுகளை வெளி கொணரும் செம்மணி ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் ஆண்டாண்டு காலமாக எதிர்கொண்டு வரும் அரச பயங்கர வாதத்தின் ஓர் அடையாளமாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக வியாழக்கிழமை (17) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது இன்று, இலங்கையர் அரசு என கூறி, ஆட்சிக்கு வந்திருக்கும் அனுர அரசுக்கு அக்னிப் பரீட்சை. இதைக் கடந்து தம்மை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு இந்த அரசு தலைவருக்கு இருக்கிறது. இது மட்டுமல்ல, தெற்கிலும் பல புதை குழிகள் இருப்பதாக ஆதாரங்கள் ஆங்காங்கே வெளிப்பட்டுள்ளன. அவற்றையும் ஆய்வு செய்து நீதியை நிலை நாட்டுங்கள் என்றார்.

எங்களது நல்லாட்சியில் பல்வேறு காரியங்களை நாமும், வடகிழக்கு தமிழ் கட்சிகளும் நிர்ப்பந்தம் செய்து ஆரம்பித்தோம்.

தொடர்ச்சி P2



## ஈராக் வணிக வளாகத்தில் தீ விபத்து; 60 பேர் பலி



தொடர்ச்சி P7

## புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழான பாடங்களில்

# வரலாறு, அழகியல், தொழில்சார் கட்டாயம்



புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் நீக்கப்பட்டுவிட்டதாக மேற்கொள்ளப்படும் பொய்யான பிரச்சாரங்கள் குறித்து தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ள கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, கல்வியையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## எஹெலேபொல வளவில் உள்ள

# மெழுகு அருங்காட்சியகம் திறந்து வைப்பு



கண்டியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க எஹெலேபொல வளவில் உள்ள மெழுகு அருங்காட்சியகம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவால், வியாழக்கிழமை (17) அன்று திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2





# செம்மணிக்கு நீதி கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக வியாழக்கிழமை (17) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழியில் 24 நாட்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளின் போது சுமார் 65 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

# தேயிலையின் தரத்தை மேம்படுத்த திட்டம்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் ஐந்நூறு சிறு தேயிலை உற்பத்தி கிராமங்கள் உருவாக்கப்படும் என தெரிவித்த பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன, தேயிலையின் தரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “இரவில் கவனம்”

முச்சக்கர வண்டியில் கொட்டாவ நகரிலிருந்து தலகல பகுதிக்குச் செல்லும் போது சாரதியைத் தாக்கி முச்சக்கர வண்டியை திருடிய சம்பவம் தொடர்பில் மொரகஹதென்ன பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கண்டி பாடசாலைகளுக்கு

# எசல விடுமுறை

வருடாந்த எசல பெரஹெராவின் போது, கண்டியில் எதிர்பார்க்கப்படும் கடுமையான போக்குவரத்து நெரிசல் மற்றும் போக்குவரத்து சவால்கள் காரணமாக, ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 4 வரை இரண்டாம் தவணை விடுமுறைக்காக அந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகள் மூடப்படும் என்று கண்டி வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# புத்தகப்பையுடன் கிடந்த என்புத்தொகுதியில் அதிர்ச்சி



செம்மணி மனிதப்புதைகுழியில் நீலநிறப்புத்தகப்பை மற்றும் விளையாட்டு பொம்மை என்பவற்றுடன் கண்டறியப்பட்ட என்புத்தொகுதி 4 - 5 வயதுடைய சிறுமியின் எலும்புக்கூடாக இருக்கலாம் என சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் யாழ் நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பாராளுமன்றத்தை

# படம்பிடித்த ட்ரோன்கள்



பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற வளாகம் பல ட்ரோன்கள் ஊடாக புதன்கிழமை (16) அன்று பல மணி நேரம் படங்கள் பிடிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற வளாகத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் பல ட்ரோன்களைப் பயன்படுத்தி வீடியோவில் பதிவு செய்யப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அரை நிர்வாண சுற்றுலாப் பயணி:

# ஆணா? பெண்ணா?





அறுகம் விரிகுடாவில் தாய்லாந்து சுற்றுலாப் பயணி ஒருவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையைத் தொடர்ந்து, மேலாடையின்றி நடந்த சம்பவத்தில் நீதிமன்றம் பாலினத்தை எவ்வாறு விளக்கியது என்று சமூக ஊடகப் பதிவு கேள்வி எழுப்பியுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அனுர அரசுக்கு ஓர் அக்னி பரீட்சை”

ஐநா சபைக்கு கொண்டு போனோம். தீர்மானங்கள் நிறைவேற்றினோம். அரசியல் கைதிகளைக் கணிசமாக விடுவித்தோம். காணிகள் கணிசமாக விடுவித்தோம். காணாமல் போனோர் அலுவலகம், நஷ்டஈட்டு அலுவலகம், ஆகியவற்றை அமைத்தோம். யுத்த அவலத்துக்கு மூல காரணமான தேசிய இனப் பிரச்சினைக்கு “அதிகார பகிர்வு” தீர்வை தேடி, புதிய அரசியலமைப்பு பணியைச் செய்தோம்.

அனைத்தையும் நான்கு ஆண்டுகளில் செய்து முடிக்க முடியவில்லை. முடியாது. ஆனால் நாம் நல்ல ஆரம்பத்தைத் தந்தோம்.

நாம் ஆரம்பித்த இந்த பணிகளை அப்படியே முன்னே கொண்டு செல்ல வேண்டியதே இந்த அரசின் கடமை. முதலில் காணாமல் போனோர் அலுவலக அதிகாரிகளை அங்கே அனுப்புங்கள். அதைச் செய்யுங்கள் என நான் அனுர குமார திசாநாயக்கவை நான் கோருகிறேன் என்றார்.



# ஷாருக் கான் வரமாட்டார்

சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ் ஸ்ரீலங்காவின் செய்தித் தொடர்பாளர், “இந்த வெளியீட்டு நிகழ்வு ஒரு மைல்கல் கொண்டாட்டமாகத் தொடரும், இதில் வரும் நாட்களில் வெளிப்படுத்தப்படும் உள்ளூர் மற்றும் சர்வதேச திறமையாளர்களின் அசாதாரண வரிசை இடம்பெறும். உலகத் தரம் வாய்ந்த பொழுதுபோக்குக்கான உலகளாவிய அங்கீகாரம் பெற்ற இடமாக இலங்கையின் பயணத்தில் இந்த தருணத்தை ஒரு வரையறுக்கப்பட்ட மைல்கல்லாக மாற்ற நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்" என்று கூறினார்.

# மெழுகு அருங்காட்சியகம் திறந்து வைப்பு



நகர அபிவிருத்தி அதிகார சபையால் புதுப்பிக்கப்பட்ட எஹெலேபொல வளவின் தொல்பொருள் மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாப்பதற்காக இந்த அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டுள்ளது.

எஹெலேபொல வளவின் ஒரு பகுதியாக இருக்கும் மலைநாட்டு இராச்சியத்தின் கட்டிடக்கலை, பழக்கவழக்கங்கள் மற்றும் கலைகள் இங்கு மெழுகைப் பயன்படுத்தி மீளுருவாக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய கைவினைப்பொருட்கள் தொடர்பான கண்காட்சி அரங்குகள் மாத்திரமன்றி, பண்டைய உணவகமும் நிறுவப்பட்டுள்ளன.

வணக்கத்திற்குரிய வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர சங்கராஜ தேரர், வணக்கத்திற்குரிய வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர், மன்னர் விமலதர்மசூரிய, குசுமாசன தேவி, மொனரவில கெப்பட்டிபொல , தேவேந்திர முலாச்சாரி, ஆளுநர் ராபர்ட் பிரவுன்ரிக், எஹெலேபொல மகாதிகாரம், குமாரிஹாமி மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட வரலாற்றில் முக்கியமான 35 நபர்களின் உயிரோட்டமான மெழுகு உருவங்கள் இங்கு மீளுருவாக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பெருமையையும் கண்ணியத்தையும் பிரதிபலிக்கும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகம், கண்டிக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அருங்காட்சியகமானது மலைநாட்டு இராச்சியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வரலாற்றை தற்போதைய தலைமுறையினருக்குத் துல்லியமாக அறிந்துகொள்ளக் கூடிய இடமாக இருக்கும்.

கம்பளையில் வசிக்கும் அதுல ஹேரத் இந்த சிற்பங்களை உருவாக்கியுள்ளதோடு ஸ்ரீ தலதா மாளிகையின் எஹெலேபொல வளவு அருங்காட்சியக விசேட திட்டத்தின் கீழ் இந்தத் திட்டத்திற்காக 300 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

# புத்தகப்பையுடன் கிடந்த என்புத்தொகுதியில் அதிர்ச்சி



யாழ். செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(15) அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.


இதன்போது, அந்த மனிதப் புதைகுழியில் நீலநிறப்புத்தகப்பை மற்றும் சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பவற்றுடன் கண்டறியப்பட்ட என்புத்தொகுதி தொடர்பான அறிக்கை மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் நீலநிறப்புத்தகப்பை மற்றும் சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பவற்றுடன் அடையாளம் காணப்பட்ட எஸ் - 25 என அடையாளமிடப்பட்ட குறித்த என்புத்தொகுதி 4 - 5 வயதுடைய சிறுமியினுடையதாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அத்தோடு எஸ் - 48, எஸ் - 56 என அடையாளமிடப்பட்ட, சிறுவர்களுடையது எனச் சந்தேகிக்கப்படும் என்புத்தொகுதிகளுக்கும் புத்தகப்பையுடன் அடையாளம் காணப்பட்ட சிறுமியினுடைய என்புத்தொகுதிக்கும் இடையே உடைகள் மற்றும் என்பியல் சார்ந்த ஒத்த தன்மைகள் இருப்பதாகவும் மருத்துவ அதிகாரி பிரணவன் மன்றில் தெரிவித்தார்.

அதனையடுத்து சிறுவர்களுக்குச் சொந்தமானவை எனச் சந்தேகிக்கப்படும் குறித்த இரண்டு என்புத்தொகுதிகளிலும் என்பியல் ஆய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவானால் அறிவுறுத்தப்பட்டது.

# வரலாறு, அழகியல், தொழில்சார் கட்டாயம்



மேல் மாகாண கல்வி துறை சார்ந்த உத்தியோகத்தர்களிடையே புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மேல் மாகாண சபை கேட்போர் கூடத்தில் ஜூலை 17 நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதமர், புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் அழகியல், வரலாறு ஆகிய பாடங்களோடு தொழில்சார் பாடமும் கட்டாயமாகக் கற்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது என்றார். எனினும், இந்த தேசிய வேலைத்திட்டம் குறித்த சரியான ஆய்வை மேற்கொள்ளாத சிலர், வரலாறு மற்றும் அழகியல் கல்வி நீக்கப்பட்டுவிட்டதாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேற்கண்ட பாடங்கள் தொடர்பாகப் பாட நிபுணர்களுடன் பல நாட்கள் கலந்துரையாடி, அனைத்து மாணவர்களிடமும் வரலாறு குறித்த அறிவையும், மனிதநேயம் குறித்த குணாதிசயங்களையும் வளர்க்க உதவும் அழகியல் கல்வியை கற்கும் வாய்ப்பு கிடைக்கும் வகையிலேயே இந்த கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதமர் விளக்கமளித்தார்.

“நாம் அரசியல் செய்வோம், ஆனால், கல்வியையும் குழந்தைகளையும் அதன் பால் ஈர்க்காமல் இருப்போம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இந்தப் பாடங்களை எவ்வாறு கற்க வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறியிருப்பதாகவும், தனது துறைக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாத தரமான சிறுவர்களை எவ்வாறு உருவாக்குவது என்பதைப் புரிந்துகொண்டே இந்தச் சீர்திருத்தத்தைச் செய்வதாகவும் பிரதமர் தெரிவித்தார். ஆகவே, புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய உண்மையான விடயங்களை அறிந்துகொண்ட அனைவரும் உண்மை நிலவரத்தைச் சமூகத்திற்கு எடுத்துச் செல்லுமாறு பிரதமர் கேட்டுக்கொண்டார்.

# தேயிலையின் தரத்தை மேம்படுத்த திட்டம்

இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அமைச்சர் சமந்த வித்தியாரத்னவுடன் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கலந்து கொண்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் தேயிலை தொழிற்துறையை முன்னேற்றுவதாக குறிப்பிட்டு சர்வதேச நாடுகளில் விளம்பரங்கள் வெளியிடுவதற்காக மாத்திரம் 1965 இலட்சம் ரூபாய் பணம் செலவிடப்பட்டுள்ளது.

உலக வங்கியிடம் மாத்திரம் 48.9 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 60 வேலைத்திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன. இந்த திட்டங்களுக்காக முன்னாள் அமைச்சர்களின் மனைவிகள் மூவர், பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மேலும், தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் விதம், தேயிலை உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் உரையாற்றிய அமைச்சர், இலங்கை தேயிலை நாமத்தை உயர்நிலைக்குக் கொண்டு செல்வதற்காக அனைவரும் இணைந்து செயல்படுவோம் என்றார்.

# எசல விடுமுறை

இலங்கையின் மிக முக்கியமான கலாச்சார மற்றும் மத விழாக்களில் ஒன்றான எசல பெரஹெரா ஜூலை 30 முதல் ஆகஸ்ட் 9 வரை நடைபெறும்.

அதன்படி, வலயத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிங்கள மற்றும் தமிழ்ப் பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணை விடுமுறைகள் ஆகஸ்ட் 8 முதல் ஆகஸ்ட் 17 வரை இருக்கும், அதே நேரத்தில், முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஆகஸ்ட் 20 முதல் ஆகஸ்ட் 24 வரை விடுமுறை அளிக்கப்படும். பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சிறப்பு சுற்றறிக்கையில், ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 7 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள், பாதுகாப்புப் பணியாளர்களுக்கான தங்குமிடமாகப் பயன்படுத்தப்படும் என்று வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தவறவிட்ட பாடசாலை நாட்களை ஈடுசெய்யும் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு வலயக் கல்வி பணிப்பாளர் அனைத்து அதிபர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இதில் கூடுதல் வகுப்புகள் நடத்தப்படுமா என்பதும் அடங்கும். ஆகஸ்ட் 5, 6 மற்றும் 7ஆம் திகதிகளை உள்ளடக்கிய பாடசாலை விடுமுறையை நீட்டிப்பது அவசியமா என்பதைத் தெளிவுபடுத்துமாறும் அதிபர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# “இரவில் கவனம்”

மேலும், சாரதியிடம் இருந்து 11 ஆயிரம் ரூபாய் பணம், இரண்டு கையடக்க தொலைபேசிகள் மற்றும் முச்சக்கர வண்டியின் ஆவணங்களையும் குறித்த குழு எடுத்துச் சென்றுள்ளது. குழந்தையைத் தூக்கிக்கொண்டு பெண்ணொருவர் இரு ஆண்களுடன் கொட்டாவ நகரிலிருந்து இரவு 9 மணியளவில் இந்த முச்சக்கர வண்டியில் ஏறி, தலகல பகுதிக்குச் செல்ல வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியில் பயணித்த மூவரில் ஒருவர் கைகளால் தனது கண்களை மூடிக்கொண்டு மிளகாய்த் தூள் போன்ற ஒன்றை முகத்துக்குப் பூசியதாக சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பின்னர் அவர் முச்சக்கரவண்டியில் இருந்து தான் வெளியே தள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற கொள்ளை சம்பவங்கள் அவ்வப்போது நடப்பதாகவும், முச்சக்கர வண்டிகளைச் செலுத்துபவர்கள் இரவில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆணா? பெண்ணா?

26 வயதான தாய்லாந்து சுற்றுலாப் பயணிக்கு பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தால் ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அநாகரீகமான நடத்தை மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார்.

பெண் என நீதிமன்றத்தில் அடையாளம் காணப்பட்ட நபர், சுற்றுலாப் பயணி ஒரு ஹோட்டல் அருகே மேலாடையின்றி நடப்பதைக் காட்டும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து இந்த வார தொடக்கத்தில் கைது செய்யப்பட்டார்.

இருப்பினும், ஆன்லைனில் பகிரப்பட்ட தாய்லாந்து நாட்டவரின் கடவுச்சீட்டில் புகைப்படம், “M” (ஆண்) என பட்டியலிடப்பட்ட பாலினத்தைக் காட்டியது மற்றும் “Mr.” என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கேள்விகளை எழுப்பியதை அடுத்து, நிலைமை புதிய திருப்பத்தை எடுத்துள்ளது, ஏனெனில் இலங்கை சட்டம் பொதுவில் ஆண்கள் சட்டையின்றி நடந்துகொள்வதை குற்றமாக்கவில்லை.

இலங்கை சட்டம் தற்போது ஆண்-பெண் இருபாலார்களுக்கு அப்பால் பாலின அடையாளங்களை அங்கீகரிக்கவில்லை.

# படம்பிடித்த ட்ரோன்கள்

பாராளுமன்றம் பற்றிய ஆவணப்படம் தயாரிப்பதற்காகப் பாராளுமன்ற வளாகம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அதிகாரிகள் குழுவும், அந்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. பாராளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவ்வப்போது ட்ரோன் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

# ஆடிப்பிறப்பு கொண்டாட்டம்

ஆடிப்பிறப்பு சைவத் தமிழ் மக்களினால் ஆடி மாத முதல் நாள் கொண்டாடப்படும் விழாவாகும். சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை முதல் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலமாகும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். அடுத்து சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரை உள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலமாகும். இது தேவர்களுக்கு இராப்பொழுதாகும். தட்சணாயணத்தின் தொடக்க தினம் ஆடி மாத முதல் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. இந்நாளில் தமிழ் மக்கள் ஆடிக்கூழ் கொழுக்கட்டை என்னும் உணவு வகைகளை விசேடமாகத் தயாரித்து குடும்ப விருந்தாக உண்டு மகிழ்தல், விசேட வழிபாடு செய்தல், உற்றார் உறவினர்களுக்கு இவ்வுண்டி வகைகளை வழங்கி நல்லுறவைப் பேணுதல் என்பன வழக்கமாகும்.


இந்த ஆடிப்பிறப்பானது வீடுகளில் மாத்திரமன்று ஆலயங்கள், பாடசாலைகள், வேலை செய்யும் அலுவலகங்கள் என அனைத்து இடங்களிலும், தமிழர்களின் ஏனைய பண்டிகைகளைப் போலவே கொண்டாடப்படுகிறது.


அந்த வகையில் வியாழக்கிழமை (17) அன்று யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மற்றும் வவுனியா தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சிலை அடியில் ஆடி விழா கொண்டாடப்பட்டது.

புகஜிந்தன், க.அகரன்











# "ஜிகாத் படுகொலை: விசாரணை வேண்டும்"

■ கஜனா சந்திரபோஸ், வ. சக்தி



"ஜிகாத்" எனும் முஸ்லிம் ஊர்காவல் படையினர், சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்ய விடயங்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். என நாம் தமிழர் சமூக சேவை ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் கோபாலன் பிரசாத் தெரிவித்துள்ளார்.

திராய்க்கேணி படுகொலைகள். 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் திகதி இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி என்னும் தமிழ்க் கிராமம் ஒன்றில் இடம்பெற்ற படுகொலை சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் 47 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். என நாம் தமிழர் சமூக சேவை ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் கோபாலன் பிரசாத் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிகுடியில் புதன்கிழமை (16) மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

திராய்க்கேணி கிராமம் மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே 70 கி.மீ தொலைவில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது. உதவியுடன் திராய்க்கேணி கிராமத்தினுள் நுழைந்த முஸ்லிம் ஊர்காவல் படை அங்குள்ள கோயிலில் தஞ்சமடைந்திருந்த 47 தமிழர்களைப் படுகொலை செய்தனர். வீடுகளினுள் வைத்து முதியவர்கள் பலர் உயிருடன் தீ வைத்து கொளுத்தப்பட்டனர். 350 வீடுகள் முஸ்லிம் ஊர்க்காவல் படையால் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்த படுகொலையில் இராணுவத்துடன் முஸ்லீம் ஊர்காவல் படையும் இனப்படுகொலை புரிந்தனர் என்பது பின்னர் தெரியவந்தது.

இது போன்று கிழக்கில் பல படுகொலைகள் நடந்தன.

சம்மாந்துறை படுகொலை, சித்தாண்டி படுகொலை, பொத்துவில் படுகொலை, கல்முனை படுகொலை, துறைநீலாவணை படுகொலை, ஏறாவூர் வைத்தியசாலை படுகொலை, கோராவெளி ஈச்சையடித்தீவு படுகொலை, ஏறாவூர் படுகொலை, நற்பிட்டிமுனை படுகொலை, புதுக்குடியிருப்பு படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை என கிராமம் கிராமமாக ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1990ஆம் ஆண்டு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினருடன் சேர்ந்து சம்மாந்துறை மற்றும் அதனை சூழவுள்ள முஸ்லிம்கள் வீரமுனை தமிழ் மக்களை வெட்டிக்கொலை செய்து அக்கிராமத்திலிருந்து வெளியேற்றியிருந்தார்கள்.

அண்மைக்காலத்தில் தான் அவர்கள் மீண்டும் வீரமுனையில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். 1990களில் வீரமுனை பிள்ளையார் கோவில் உட்பட சைவ ஆலயங்களில் தஞ்சம் அடைந்திருந்த தமிழ் மக்களை முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் ஈவிரக்கமின்றி வெட்டி கொலை செய்தனர். பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்தனர். கைக்குழந்தைகளைக் கூட இரண்டு துண்டாக வெட்டி வீசினர். வீரமுனை தமிழ் கிராமத்தில் தமிழர்கள் மீது 1990ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு சில படுகொலைகளைத் திகதி வாரியாக இங்கே தருகிறேன்.

20.06.1990 வீரமுனை பிள்ளையார் கோவில் படுகொலை அதிரடிப்படை மற்றும் முஸ்லிம் ஊர்க்காவல் படைகளால் 69 தமிழர்கள் படுகொலை

05.07.1990 வீரமுனையில் 13 தமிழர்கள் படுகொலை .

10.07.1990 வீரமுனையில் 15 தமிழர்கள் படுகொலை .

16.07.1990 மல்வத்தை இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல்படையினருமாக சுமார் 30 பேர் 8 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்தனர்.

26.07.1990 வீரமுனையில் 23 சிறுவர்கள் உட்பட 32 இளைஞர்கள் முஸ்லிம் ஊர்காவல்படையினராலும் விசேட அதிரடிப்படையினராலும் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர்.

29.07.1990 ஆசிரியர் ஒருவர் குடும்பத்துடன் பஸ் ஒன்றில் வீரமுனையை விட்டு வெளியேறிக்கொண்டிருந்த போது கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

01.08.1990 சவளக்கடையில் 18 பேர் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர்.

12.08.1990 வீரமுனை அகதி முகாமில் புகுந்த முஸ்லிம் ஊர்க்காவல் படை குழு வாள்களால் வெட்டி தாக்குதல் நடத்தியது. இதில் கோவில் தர்மகர்த்தா தம்பிமுத்து சின்னத்துரை உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். வீரமுனையில் 600 வீடுகளும், சம்மாந்துறை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி கணபதிபுரம், மல்வத்தை ஆகிய கிராமங்களில் இருந்த 1,352 தமிழர்களின் வீடுகள் முஸ்லிம்களால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டது.

20.06.1990க்கும் 15.08.1990க்கும் இடைப்பட்ட காலத்தில் வீரமுனையில் மட்டும் 232 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 1,600க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது. அயல் கிராமமான சம்மாந்துறையை சேர்ந்த முஸ்லிம்களே சிங்கள இராணுவ உதவியுடன் இப்படுகொலையினை செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் மோசமான தாக்குதலுக்கு உள்ளான பிரதேசங்களாக வாழைச்சேனை, செங்கலடி, ஆரையம்பதி, நீலாவனை, பாண்டிருப்பு முதலானவை காணப்படுகின்றன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களால் தமிழ்க் கிராமங்கள் பல அழிவுற்றன.

பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்து சூறையாடப்பட்டு இன்று சிதைவுக்குள்ளான கிராமங்களாக பாலமுனை, பாணமை, மீனோடைக்கட்டு, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, கரவாகு, தீகவாவி, மாந்தோட்டம், கொண்டா வெட்டுவான், பூரணி, செம்மணிக்குளம், தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் முதலானவை காணப்படுகின்றன.

தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சுவடுகள் துடைத்தழிக்கப்பட்டு இக்கிராமங்கள் இன்று முஸ்லிம் கிராமங்களாக மாறியுள்ளன. இச்சூழலில் அம்பாறை மாவட்டத்தில் படிப்படியாக முஸ்லிம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் தமிழ்க் கிராமங்களாக அட்டைப்பள்ளம், சவளக்கடை, திராய்க்கேணி, சொறிக்கல்முனை, மீராச்சோலை முதலானவற்றைக் கூறலாம். இப்பூர்வீகக் கிராமங்களில் பிறந்த தமிழர்கள் பலர் இவ்வன்முறையோடு தாக்குதல்களுக்கு உள்ளவராகவும் தம் சுயமிழந்து அகதி அந்தஸ்து அங்கீகரிக்கப்படாதவர்களாகவும் காணப்படுகின்றனர். முஸ்லிம் ஊர்க்காவல் படைகளால் இக்கிராமம் பெண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதோடு மிலேச்சத்தனமான முறையில் படுகொலையும் செய்யப்பட்டனர்.

# கார் - முச்சக்கர வண்டி விபத்தில் நால்வர் காயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ




கார் ஒன்றும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியின் சாரதி உட்பட நான்கு இளைஞர்கள் காயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக திம்புல பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து, ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை சுரங்கப் பாதைக்கு அருகில் வைத்து வியாழக்கிழமை (17) காலை 8.00 மணியளவில் நிகழ்ந்துள்ளது. நிட்டம்புவையிலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி மீது நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி, எதிர் திசையில் பயணித்த கார் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வரும் திம்புல பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கார் ஓட்டுநருக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கமே விபத்திற்கான காரணம் என பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டி மற்றும் காருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ஹட்டன் -நுவரெலியா மற்றும் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதிகளில் வாகனம் செலுத்தும் போது எச்சரிக்கையுடன் வாகனத்தை செலுத்துமாறு திம்புல பத்தனை பொலிஸார் ஓட்டுநர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# யாழ். அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு



■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அதன் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன் தலைமையில் இணைத்தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான வேதனாயகனின் பங்கேற்புடன் யாழ். மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை (17) காலை 9.00 மணியளவில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலாகவே குறித்த கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இக்கூட்டத்தில் வீதி அவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு, போக்குவரத்து, மின்சாரம், கல்வி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# கம்பஹா பிரதேச சபை

## விலைமனு கோரல்

### கொள்முதல் இல DS /03/2025

01. கம்பஹா பிரதேச சபையின் கொள்முதல் குழுவின் தலைவர், மாகாண சபை திட்டம் மற்றும் சபை நிதிகளின் விதிகளின் அடிப்படையில், அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி, கம்பஹா பிரதேச சபைப் பகுதியில் உள்ள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தகுதியான ஏலதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கல் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டி விலைமனு முறையின்படி விலைமனுக்கள் கோரப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் 2025.07.17 ஆம் திகதி முதல் அரச அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை கம்பஹா பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவிற்குச் சென்று ஏலங்கள் தொடர்பாக பரிசீலிக்கலாம் மேலும் இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பணி மேற்பார்வையாளரிடம் (033--2220145) பெற்றுக்கொள்ளலாம்.

04. 2025.07.17 ஆம் திகதி முதல் 2025.08.06 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை திரும்பப்பெற முடியாத கட்டணமாக ரூ.1000.00 (ஆயிரம் ரூபாய்) செலுத்தி எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து விலைமனு விண்ணப்பங்களை அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

05. அசல் மற்றும் நகலாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள், 2025.07.22 ஆம் திகதி அன்று காலை 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக, "தலைவர், கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுங்கொடை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது கம்பஹா பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடப்பட வேண்டும் அல்லது கொள்முதல் இல, திட்டம், இலக்கம், பெயர் மற்றும் அசல் அல்லது நகலாக கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலை இல் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக பெறப்பட்ட விலை மதிப்பீடுகள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பெறப்படும் நேரம் முடிந்தவுடன் கம்பஹா பிரதேச சபை கேட்போர் கூடத்தில் ஏலதாரர்கள் ஃ பிரதிநிதிகள் முன்னிலையில் ஏலம் திறக்கப்படும்.

06. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது, CIDA பதிவை உறுதிப்படுத்த அதன் சான்றளிக்கப்பட்ட நகலை பண ஏலப் பிணையத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும் (திரும்பப்பெறக்கூடியது) வைப்பு செய்வதாக இருந்தால், கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டு அற்த ரசீது அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவாதப் பத்திரம் (செல்லுபடியாகும் காலம் 45 நாட்கள் இருக்க வேண்டும்) அல்லது ஏலத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**பி.டீ. செனரத் பீரிஸ்,**
**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**கம்பஹா பிரதேச சபை,**
**மிரிஸ்வத்தே,**
**முதுங்கொட.**
**2025.07.16**

## அட்டவணை

| வரிசை இல | திட்ட இலக்கம் | திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.) (வாட் தவிர்த்து) | ஏலப் பாதுகாப்பு (ரூ.) |
|---|---|---|---|---|
| | | **மாகாண சபையின் அபிவிருத்தி திட்டம்–2025** | | |
| 1 | GPS/2/5/2/03/2025 | கம்பஹா பிரதேச சபைக்குச் சொந்தமான கணேமுல்ல கழிவு பிரிக்கும் மையத்தை நவீனமயமாக்குதல். | 4,993,136 | 49,931.36 |
| 2 | GPS/2/5/2/10/2025 | கம்பஹா பிரதேச சபைக்கு சொந்தமான கலஹிடியாவ ஆயுர்வேத மருந்தகக் கட்டிடம் புனரமைப்பு. | 1,045,730 | 10,457.30 |
| 3 | GPS/2/5/2/11/2025 | கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் 220ஏ அம்பன்விட்ட கிராம அலுவலர் பிரிவில் உள்ள அம்பன்விட்டவிலிருந்து தனிபொலவத்த விகாரைக்கு செல்லும் கிராம மக்கள் அத்தனகலு ஓயாவின் குறுகலான பாலத்தை பாதுகாப்பாகக் கடக்க உதவும் வகையில் கைப்பிடி அமைக்கும் பணி. | 842,044 | 8,420.44 |
| 4 | GPS/2/5/2/12/2025 | கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் 242 எம்பரலுவ வடக்கு மற்றும் 242 பி எம்பரலுவ தெற்கு (ஸ்வீட் ஹவுஸ்/க்கு அருகில்) ஆகியவற்றை இணைக்கும் கிராம வீதியின் நடுவில் மூழ்கி உடைந்து காணப்பட்ட கொங்கிரீட் வீதியை புனரமைத்தல், மற்றும் தண்ணீரை வெளியேற்றுவதற்காக கல்வெர்ட்டின் கைப்பிடி மற்றும் பக்கவாட்டு சுவர் அமைத்தல். | 2,902,997 | 29,029.97 |
| 5 | GPS/2/5/2/15/2025 | கம்பஹா பிரதேச செயலகப் பிரிவு இல. 242பி-எம்பரலுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வெல மெத வீதியின் நடுவில் பிளவுபட்டுள்ள வீதி, எஃகு குழாய்கள் மற்றும் பக்கவாட்டு சுவர்களைப் பயன்படுத்தி கான்கிரீட் செய்யப்பட்டு வீதியை புனரமைத்தல் (சமன் மர ஆலைக்குச் செல்லும் சாலை). | 1,659,022 | 16,590.22 |
| 6 | GPS/2/5/2/16/2025 | கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் டிராக்மோ சந்தியில் உள்ள திலகரத்ன மாவத்தையில் சந்தையின் நடுவில் பாயும் கால்வாயில் டிராக்டர் சாய்வுதளத்துடன் கூடிய பக்கவாட்டு அணை கட்டுதல். | 1,491,332 | 14,913.32 |
| | | **சபை நிதி – 2025** | | |
| 7 | GPS/2/5/1/54/2025 | அமுனுகொட ரஜமஹா விகாரைக்கு அருகாமையில் உள்ள வெலமெட வீதி அபிவிருத்தி. (தடுப்புச் சுவர்) | 2,540,501 | 25,405.01 |

# அந்நியரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை பார்க்க பெற்றோர் விரும்புவதில்லை

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் மீது மூத்த மாணவர்கள் துரத்திச் சென்று அடித்து காயப்படுத்தியதாக அறியப்படுகிறது. இந்த சம்பவத்தில் முதலாம் ஆண்டு மாணவர்கள் காயமடைந்தனர், அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற ஆம்புலன்ஸும் தாக்கப்பட்டது. எங்களுக்குத் தெரிந்தவரை, ஆம்புலன்ஸ் ஓட்டுநரும் ஓரளவு காயமடைந்தார்.

இந்த நாட்டின் பல்கலைக்கழகங்களில் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாக நடந்து வரும் புதிய போரை எந்த அரசாங்கத்தாலும் தோற்கடிக்க முடியவில்லை. பல்கலைக்கழகங்களில் புதிய போர் வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே நிகழ்கிறது.

இந்தப் போரில் குச்சிகள் மற்றும் பிற உலோகப் பொருட்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் போரில் முக்கிய போர் ஆயுதங்கள் வாய்மொழி கட்டளைகள், ஆபாசமான வார்த்தைகள் மற்றும் பாலியல் சித்திரவதைகள். சில சமயங்களில் இங்கு பாலியல் வன்கொடுமை கூட செய்யப்படுகிறது.

பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக வந்த பெண்கள் மற்றும் சிறுவர்களைக் கட்டளையிடும் மூத்த புதிய சித்திரவதையாவார்கள் பல்வேறு பாலியல் செயல்களைச் செய்யச் சொல்கிறார்கள். இதுபோன்ற செயல்களைச் செய்ய விரும்பாத மாணவர்களுக்குத் தண்டனை இரட்டிப்பாக்கப்படுகிறது.

இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்களின் மூத்த ஆசிரியர்களும் நிர்வாகமும் புதிய சித்திரவதை செய்பவர்களுக்குப் பயப்படுகிறார்கள்.

இலங்கை பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்ற கருத்து 1970 முதல் நடைமுறையில் உள்ளது. ஆரம்ப நாட்களில், புதிய மாணவர்களைக் குளிப்பாட்டுவது போன்ற எளிய செயல்கள் நடந்தன. ஆனால் இப்போது அந்த எளிமை ஒரு கொடிய ஆவேசமாக மாறிவிட்டது.

பல்கலைக்கழகங்களில் ஆண் மற்றும் பெண் மாணவர்கள் இருவரும் உள்ளனர். சில சந்தர்ப்பங்களில், கொடியவர்களாக உள்ளனர். உயர்தரப் பரீட்சையில் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்பட்ட குழந்தைகளைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதற்குப் பதிலாகத் தனியார் பல்கலைக்கழகங்களுக்கோ அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கோ அனுப்பும் போக்கு தற்போது உள்ளது.

இரத்தத்தாலும், பாலாலும் வளர்க்கப்பட்ட தங்கள் பிள்ளைகள் அந்நியரால் பாலியல் வன்கொடுமை செய்யப்படுவதையோ அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படுவதையோ பெற்றோர்கள் பார்க்க விரும்புவதில்லை. ஒவ்வொரு தாயும் தந்தையும் தங்கள் குழந்தையை ஒரு ரத்தினமாகக் கருதுகிறார்கள். இந்த ரத்தினத்தை மெருகூட்ட, ஒரு மதிப்புமிக்க சூழல், சத்தான உணவு, அன்பு மற்றும் கல்வி அவசியம்.

புதிய சித்திரவதை செய்பவர்கள் தங்களைப் போலவே மாணவர்களையும் துஷ்பிரயோகம் செய்வது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. புதிய சித்திரவதையை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாததால் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ளுதல் அடிக்கடி நிகழ்கின்றன என்பதை நாங்கள் அறிவோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அறியாமை என்பது மிகவும் பாரதூரமானது. அறியாமையில் புகுந்து கொள்ளும்போது, வாழ்க்கையின் அழகும் வதனமும் மறைந்து போகின்றன. நல்லதும் சிறப்பானதுமான சிந்தனைகளைச் சிரசில் ஏற்றாமல், தன்னறிவும் கிரகித்தல் அறிவும் இன்றி வாழ்ந்தால், புறக்கணிக்கக் கூடாத நற்பயன்கள், பெறுபேறுகளை இழந்துபோவதை அறியாமல் வாழவேண்டி வரும். இது ஒரு துர்ப்பாக்கிய நிலை.

எந்த ஒரு விடயத்தையும் அங்கீகரிக்க முன்னர், அதைப் பகுத்தறிந்து, சிந்தனைக்குள் புகுத்திக் கொள்ளவேண்டும்.

சின்னக் குழந்தைகள் கூட கேள்விகளைக் கேட்டு, எங்களைத் திக்குமுக்காடச் செய்கிறார்கள். எங்களது சந்தேகங்களுக்கு முழுமையாக விடை அறிய முடியா விட்டாலும் அதை அப்படியே விட்டுவிடுவதும் இல்லை. சில சமயங்களில், அவர்களின் கேள்விகளால் நாங்களும் ஆச்சரியப்படுகின்றோம்.

தெரியாத விடயங்களுக்குள் அமிழ்ந்து போதலாகாது. தெரியாத விடங்களில் முடிவு எடுப்பதும் முட்டாள் தனம். சிறந்த முறையில் பாதை அமைந்தால், ஆன்மாவும் களிப்படையும்.

ஆன்மாவும் கருமங்களும் ஒன்றுக்கொன்று இயைபுபட வேண்டும். சரியான விடயங்களால் தேகம் களிப்படைகின்றது. இதனால், விழிப்புநிலை தானாக மலரும். விருப்பத்துடன் செய்க; அதைச் சரியாகச் செய்க.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை 29

# பசுமைப் புரட்சியை நோக்கி

தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1965இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மக்களின் நலன்களின் மேல் அக்கறை செலுத்தவில்லை. வேலையின்மை பாரிய பிரச்சினையாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் வேலையின்மையைப் பல ஆய்வாளர்கள் பெரும்பாலும் 1940களின் பிற்பகுதியில் ஏற்பட்ட மக்கள்தொகை அதிகரிப்பின் காரணமாகவே இப்பிரச்சினை 1960களின் நடுப்பகுதியில் உருவெடுத்தது என்று கூறினார்கள். அதையே அரசாங்கமும் சொன்னது. ஆனால், உண்மை என்னவென்றால், மக்கள்தொகை அழுத்தம் வேலையின்மைக்கு ஒரு முதன்மைக் காரணம் அல்ல. அதிக மக்கள்தொகை அழுத்தம் உள்ள நாடுகள் அனைவருக்கும் சில வேலைகளை எவ்வாறு வழங்குவது என்பதைக் கற்றுக்கொள்கின்றன. ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் அதைக் கற்றுக் கொள்ளவில்லை. இலங்கையின் வேலையின்மை நிலைமைக்கான உண்மையான விளக்கம், 1960களின் பொருளாதார தேக்கநிலை காரணமாக ஏற்பட்ட நெருக்கடியே, ஏனெனில் தவறான பொருளாதாரக் கொள்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத்தை (உள்ளூர் அல்லது வெளிநாட்டு) மட்டுமே சார்ந்திருந்தன. விவசாயம், நிலம் போன்றவற்றிலும் ஒரு சிலரின் செழிப்பு மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான முயற்சிகளில்; அரசாங்கம் ஈடுபட்டது. கிராமப்புற வறுமையை ஆளும் வர்க்கங்கள் அலட்சியம் செய்தன.

பழைமையான முறைகளைப் பயன்படுத்தி குத்தகை நிலங்களில் விவசாயிகள் விவசாயம் செய்வது தொடர்ந்து நடந்தது. கிராமப்புற மக்கள்தொகைக்கும் பயிர்செய்யப்பட்ட பரப்பிற்கும் இடையிலான விகிதம் 1946இல் 1.34ஆக இருந்தது, 1962இல் 1.81ஆகவும், 1969இல் 2.02 ஆகவும் அதிகரித்தது. கிராமப்புற வாழ்க்கையின் கட்டமைப்பு அதன் கடுமையான வறுமை, பொருளாதார பாதுகாப்பின்மை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளுடன் படித்த இளைஞர்களுக்கு நேர்மறையான கிளர்ச்சியை ஏற்படுத்தியது. அடிப்படையில், படித்த இளைஞர்களை நகர்ப்புற வேலையற்றவர்களாக மாற்றுவதற்கு விவசாயத்தை மாற்றத் தவறியதே காரணமாகும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் (1965-70) 'நில இராணுவம்' என்று அழைக்கப்பட்டதை உருவாக்குவதன் மூலம் வேலையின்மை பிரச்சினையை சமாளிக்க முயன்றது. இது மீண்டும் சாதாரண மக்களின் பிரச்சினைகளுடன் எந்த தொடர்பும் இல்லாத ஆட்சியாளர்களின் கற்பனைகளிலிருந்து உருவான சாதனங்களில் ஒன்றாகும். இந்தத் திட்டத்தைப் பிரதமர் டட்லி சேனாநாயக்க முன்மொழிந்தார்.

1960களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட உலகளாவிய உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் விதமாக, 1966 டிசம்பரில் அரசாங்கம், ஏப்ரல் 1960 முதல் 25 காசுகள் மானிய விலையில் விற்கப்பட்டு வாரத்திற்கு இரண்டு முறை வழங்கப்பட்டு வந்த இலவச அரிசி ரேஷனை வாரத்திற்கு ஒன்றாகக் குறைத்தது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், வாரத்திற்கு இருதடவை வழங்கும் நடைமுறையை மீண்டும் கொண்டுவருவதாக உறுதியளித்தன.

தொடர்ச்சியான அந்நியச் செலாவணி மற்றும் கடன் மீளச்செலுத்தல் நெருக்கடியால் உந்தப்பட்டு, அரசாங்கம் விவசாயத்தில் இறக்குமதி மாற்றீட்டை அதன் அடிப்படை பொருளாதாரக் கொள்கையாக ஏற்றுக்கொண்டது. இதை அடைய, அது 1966-1970 விவசாய மேம்பாட்டு முன்மொழிவுகள் என்ற துறைசார் திட்டத்தை வகுத்தது. நெல் உற்பத்திக்கான குறிப்பிட்ட முதலீடு மற்றும் உற்பத்தி இலக்குகளைக் கொண்ட வருடாந்த செயல்படுத்தல் திட்டங்கள் இந்த முன்மொழிவுகளைத் தொடர்ந்து வந்தன. 1964ஆம் ஆண்டு 50 மில்லியன் புஷல்களாக இருந்த நெல் உற்பத்தியை 70 மில்லியனாக அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட விவசாய மேம்பாட்டு முன்மொழிவுகள், 5 ஆண்டுகளில் 40% அதிகரிப்பை இலட்சியமாகக் கொண்டிருந்தன. அப்போது நாடு அரிசி தேவைகளில் 70% தன்னிறைவு பெறும். இந்த திட்டங்கள் முதன்மையாக விவசாயம் செய்யப்படும் நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதை நம்பியிருந்தன.

விவசாய அபிவிருத்திக்கான முன்மொழிவுகள், தீவிர விவசாயத்தின் புதிய அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டவை, இவை ஆறு விடயங்களில் குறிப்பாகக் கவனம் செலுத்தின. இவை அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட வடிவமைக்கப்பட்டுள்ளன: (1)அதிக மகசூல் தரும் விதை வகைகள், (2)இரசாயன உரங்கள், (3)டிராக்டர்கள் மற்றும் பிற விவசாய இயந்திரங்கள், (4)வேளாண்-வேதியியல் பயன்பாடு, (5)அதிகரித்த விரிவாக்க சேவைகள் மற்றும் (6)விவசாயக் கடன். இவை ஒவ்வொன்றையும் கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்.

(1)அதிக மகசூல் தரும் விதை வகைகள்: முக்கிய முன்மொழிவுகளில் ஒன்று, விதை நெல் திட்டமாகும். இது மேம்படுத்தப்பட்ட, உரங்களுக்கு ஏற்ற வகைகளின் போதுமான சான்றளிக்கப்பட்ட விதைகளை விநியோகிப்பதில் இருந்தது. இந்த விதையின் விநியோகத்தை 80,000 இலிருந்து 200,000 புஷல்களாக அதிகரிப்பதே இலக்காக இருந்தது. மேம்படுத்தப்பட்ட விதையின் மரபணு திறன் மட்டும் 10% முதல் 15% வரை இருந்தது. உரம், உறுதியான நீர் வழங்கல் மற்றும் பொருத்தமான காலநிலை நிலைமைகளுடன் இணைந்து பயன்படுத்தப்பட்டால், விளைச்சல் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பல்வேறு உயர் விளைச்சல் தரும் நெல் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஒருபுறம் இவை நல்ல விளைச்சலைக் கொடுத்தாலும் நீண்டகால நோக்கில் இவை இலங்கையின் விவசாய நிலங்களையும் நெற்பயிர்ச் செய்கையையும் அழித்தன.

(1)H7 என்ற நெல் வகை 1964இல் அறிமுகப்படுத்தப்பட்டது, H8 1966இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1968-69 மகா பருவத்தில், மொத்த நெல் பரப்பளவில் 73% மேம்படுத்தப்பட்டர் வகை நெற்கள் பயிர்செய்யப்பட்டன. 'அதிசய அரிசி' என்று அழைக்கப்படும் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிக மகசூல் தரும் IR8, பின்னர் 1968 சிறுபோகப் பருவத்தில் 10,000 புஷல் விதை நெல் இறக்குமதியுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. 1969ஆம் ஆண்டில் சுமார் 19,000 ஏக்கர் பரப்பளவிலும், 1970ஆம் ஆண்டில் 65,100 ஏக்கர் பரப்பளவிலும் IR8 பயிரிடப்பட்டது. ஆனால், அதிக அளவு நைட்ரஜன் உரங்களுடன் அது பராமரிக்கப்பட்டதால் அதன் அதிக மகசூல் திறன் இருந்தபோதிலும், உள்ளூர் நிலைமைகளின் கீழ் IR8 மோசமான முளைப்பு மற்றும் பூச்சிகளின் தாக்குதலுக்கு ஆளாகி, ஒப்பீட்டளவில் குறைந்த தரமான அரிசியைக் கொடுத்தது. எனவே விவசாயத்தை தன்னிறைவுடைய செய்யும் முயற்சிகள் பாரிய பின்னடைவை எதிர்நோக்கின.

(1) (2) இரசாயன உரங்கள்: இந்தக் காலகட்டத்தில் விளைச்சலை வியத்தகு முறையில் அதிகரித்தது உரமாகும். உர பயன்பாட்டை 60,000 தொன்னிலிருந்து 150,000 தொன்னாக அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். நெல்லில் உரப் பயன்பாட்டில் பருவத்தின் தொடக்கத்தில் பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றின் அடிப்படை பயன்பாடு மற்றும் அதைத்தொடர்ந்து, நைட்ரஜன் உரங்களை மேல் உரமிடுதல் ஆகியவை அடங்கும். ஒரு பயனுள்ள உர பயன்பாட்டுத் திட்டத்தில் அடித்தள பயன்பாட்டிற்கு உறுதியான நீர் வழங்கலும், மேல் உரமிடுவதற்கு நன்கு வடிகட்டிய மண்ணும் தேவை. உரத்தை நியாயமான முறையில் பயன்படுத்துவது நெல் விளைச்சலை அதிகரிக்கும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. வுpவசாய அமைச்சு உர பரிந்துரைகளைப் பின்பற்றுவதன் மூலம் ஏக்கருக்கு 70 புஷல் மொத்த மகசூலைப் பெற முடியும் என்று கூறியது. நிலையான உர விகிதங்களை இரட்டிப்பாக்குவதன் மூலம், ஏக்கருக்கு 90 அல்லது 100 புஷல் வரை மகசூல் அதிகரிக்க முடியும் என்பதையும் திட்டத்தின் சோதனைகள் வெளிப்படுத்தின. விவசாயிகளுக்கான உர விநியோகம் 43,000 தொன்களிலிருந்து (1960-65) 70,000 தொன்களாக (1966-70) அதிகரித்து, 1968-69இல் 86,000 தொன்களாக உச்சத்தை எட்டியது. இருப்பினும், இந்த உர உள்ளீட்டு அளவு விவசாய திட்டங்களின் உண்மையான இலக்கை விட கணிசமாகக் குறைவாக இருந்தது. 1968ஆம் ஆண்டில், நெல்லுக்கான சராசரி உர நுகர்வு ஏக்கருக்கு சுமார் 115 பவுண்டுகள் ஆகும், இது பரிந்துரைக்கப்பட்ட 392 பவுண்டுகளை விட மிகவும் குறைவாகும்.

இங்கு கவனிப்புக்குள்ளாக வேண்டியது யாதெனில் செயற்கை உரங்களின் அதிகப்படியான பயன்பாடு மண்ணின் ஊட்டச்சத்துக்கள் மற்றும் கரிமப் பொருட்களைக் குறைத்து, காலப்போக்கில் மண் வளத்தைக் குறைக்க வழிவகுத்தது. விவசாயிகள் வெளிப்புற உள்ளீடுகளை (உரங்கள், பூச்சிக்கொல்லிகள்) நம்பியிருக்கத் தொடங்கினர் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகள் பற்றிய பாரம்பரிய அறிவை இழந்தனர். .ரசாயனங்களின் அதிகரித்த பயன்பாடு பசுமை இல்ல வாயு வெளியேற்றம் மற்றும் மாசுபாட்டிற்கு வழிவகுத்தது.

## கடிதங்கள்

### வீதியை செப்பனிட்டு தரவும்



மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரில் உள்ள மத தளங்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்கு செல்லும் நுழைவாயில் வீதி பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

அவ்வீதியில் ஸ்ரீ சண்முக நாதர் ஆலயம்,சுமணாராம பௌத்த விகாரை, மஸ்கெலியா முஸ்லிம் பள்ளிவாசல், சென் ஜோசப் கிறிஸ்தவ தேவாலயம்,சமன்னெலிய சிங்கள பாடசாலை அமைந்துள்ளது. அத்துடன், சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன.

ஆலயங்களுக்கு செல்லும் பக்தர்கள், பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் பாரிய அளவில் இன்னலுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுத்து குறித்த வீதியை செப்பனிட்டு தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்

# போன் ஒடோரி விழா-2025

இலங்கையில் ஜப்பானிய போன் ஒடோரி விழா-2025இன் துடிப்பான வெற்றி கோடையின் சின்னம், பாரம்பரிய ஜப்பானிய போன் ஒடோரி விழா மஹரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற (NYSC) வளாகத்தில், NYSC மற்றும் ஜப்பானிய ஒற்றுமை சங்கம் (JSA) ஆகியவற்றுடன் இணைந்து மிகவும் வெற்றிகரமாக ஜூலை 12ஆம் திகதி நடைபெற்றது.
































ஜோன் லௌட்னரின் ஒளிவேதி விளைவளிமண்டல மறுசீரமைப்பு மற்றும் மறுவடிவமைப்பு, 2000, 2020, ஒளிப்படம்: ஜோசுவா வைட்

22 வது வருடாந்த ஜெஃப்ரி பாவா நினைவுச் சொற்பொழிவு

## "கடிகாரங்களும் மேகங்களும்" - ஃபிராங்க் எஷர் மற்றும் ரவி குணவர்தன

**வியாழக்கிழமை, 24 ஜூலை 2025**
**மாலை 6.30 மணி.**
**இலங்கை மன்றம்**
இலங்கை மன்றம் மாவத்தை, கொழும்பு 07



ஃபிராங்க் எஷர் மற்றும் ரவி குணவர்தன ஆகியோர் லொஸ் ஏஞ்சல்ஸை தளமாகக் கொண்ட எஷர் குணவர்தன கட்டடக்கலை நிறுவனத்தை 1995 இல் இணைந்து நிறுவினர். நிறுவனத்தின் திட்டங்களில் தனிப்பயன் வீடுகள் மற்றும் மனைகள், ரிச்சர்ட் நியூட்ரா மற்றும் சார்லஸ் மற்றும் ரே ஈம்ஸ் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க கட்டடக் கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் பணிகளைப் பாதுகாத்தல் மற்றும் உலகெங்கிலும் உள்ள கலைஞர்கள், கலைக்கூடங்கள் மற்றும் கண்காட்சிகளுடனான கூட்டு முயற்சி ஆகியவை அடங்கும். எஷர் மற்றும் குணவர்தன ஆகியோர் கலிபோர்னியாவின் இலங்கை சமூகத்திற்காக ஒரு தியான மைய வளாகத்தையும் வடிவமைத்துள்ளதுடன், 2018 இல் லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி கலை அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற *அலங்காரத் தீவு: இலங்கையின் கலைப்படைப்புகள்* (The Jeweled Isle: Art from Sri Lanka) என்ற கண்காட்சியின் வடிவமைப்பாளர்களாகவும் கியூரேட்டோரியல் ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர் . அவர்கள் பல பல்கலைக்கழகங்களில் கற்பித்துள்ளதுடன் 2017 இல் ஒரு தனிவுரைவு நூலை வெளியிட்டுள்ளனர்: *கடிகாரங்கள் மற்றும் மேகங்கள்: எஷர் குணவர்தனவின் கட்டடக்கலை.*

அனுமதி இலவசம். வரையறுக்கப்பட்ட இடங்களே உள்ளன. முன் பதிவு அவசியம்.
பி.ப. 6.20 மணிக்குள் உங்கள் இருக்கையில் அமர்ந்திருங்கள். இந்த சொற்பொழிவு ஆங்கிலத்தில் நிகழ்த்தப்படும்.
பதிவு செய்ய geoffreybawa.com/memorial-lectures இற்கு செல்லுங்கள்.

ஏற்பாடு
GEOFFREY BAWA TRUST

எக்ஸ்குளூஸிவ் மீடியா பார்ட்னேர்ஸ்
the SUNDAY TIMES · DAILY MIRROR · தமிழ் Mirror

# டொயோட்டா லங்காவுடன் கொமர்ஷல் வங்கி கைகோர்ப்பு



கொமர்ஷல் வங்கி, டொயோட்டா பயணிகள் மற்றும் வர்த்தக வாகனங்களின் லீசிங்கினை ஊக்குவிப்பதற்காகவும், இலங்கையில் புதுமையான லீசிங் தீர்வுகளை வழங்குவதில் முன்னணியில் உள்ள தனது நிலையை மேலும் வலுப்படுத்துவதற்காகவும், டொயோட்டா லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் ஒரு மூலோபாய பங்குடைமையில் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியானது இந்த ஒத்துழைப்பின் கீழ், டொயோட்டா வாகனங்களுக்கான லீசிங் வசதிகளைப் பெறும் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்குவதை நீடித்துள்ளது. இதில் கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள், முன்னுரிமை வீதங்களில் எட்டு ஆண்டுகள் வரை நீடிக்கப்பட்ட காலத்திள், மற்றும் இந்த லீசிங் வசதிகள் தொடர்பாக வங்கியால் வழங்கப்பட்ட கடனட்டைகளுக்கு இரண்டு வருட வருடாந்த கட்டணத் தள்ளுபடியுடன் இணைப்புக் கட்டணங்களைத் தள்ளுபடி செய்தல் ஆகியவை அடங்கும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் டொயோட்டா லங்காவானது இலவச வாகனப் பதிவு, முதல் மூன்று நிலையான சேவைகள் மற்றும் மூன்று ஆண்டுகளை உள்ளடக்கிய அல்லது 100,000 கிலோ மீட்டர்களை உள்ளடக்கிய உத்தரவாதத்தை வழங்கும் - இதில் எது முதலில் நிகழ்கிறதோ அது இதில் உள்ளடக்கப்படும்.

இந்த விசேட லீசிங் ஊக்குவிப்பானது கொமர்ஷல் வங்கியின் விரிவான கிளை வலையமைப்பு மூலம் நாடு முழுவதும் நடத்தப்படுவதுடன் மேலும் இது டிசம்பர் 31, 2025 வரை செல்லுபடியாகும். வாடிக்கையாளர்கள் முழு அளவிலான டொயோட்டா பயணிகள் மற்றும் வர்த்தக வாகனங்களிலிருந்து விரும்பியதை தெரிவு செய்யலாம். மேலும் தனிப்பட்ட வருமான முறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட மீளச் செலுத்தும் தெரிவுகள் மூலமும் பயனடையலாம்.

உலகின் முதல் 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழ்வதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. தனியார் துறையின் மிகப்பாரிய கடன் வழங்குநராக விளங்கும் கொமர்ஷல் வங்கி, SME துறையினருக்கு பாரியளவில் கடனுதவி வழங்கும் கடன் வழங்குநராகவும் உள்ளது. மேலும் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் திகழும் இவ்வங்கி இலங்கையின் முதலாவது 100% கார்பன்-நடுநிலைமையை பேணும் வங்கியாகும்.



# பொருளாதார ஒத்துழைப்பு கொள்கை பற்றிய உரையாடல்

ஜூலை 4ஆம் திகதி, இலங்கைக்கு விஜயம் செய்தபோது, ஜப்பான் வெளியுறவு அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்பு பணியகத்தின் உதவி அமைச்சர்/ இயக்குநர் ஜெனரல் இஷிசுகி ஹிடியோ, இலங்கையின்புதிய அரசாங்கத்தின் கீழ் முதல் முறையாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமஉடன் ஜப்பான்-இலங்கை பொருளாதார ஒத்துழைப்பு கொள்கை உரையாடலை நடத்தினார்.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகியோ இசொமதா மற்றும் வெளியுறவு அமைச்சகம், நிதி அமைச்சகம், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சு (ஒன்லைன்), ஜப்பான் தூதரகம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தனது கருத்துக்களில், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ பசிபிக் பகுதியைப் பராமரிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் இலங்கை ஒரு முக்கியமான பங்காளியாக உள்ளது என்பதை இயக்குநர் ஜெனரல். இஷிசுகி எடுத்துரைத்தார். மேலும் இலங்கையுடன் வளர்ச்சி ஒத்துழைப்பைத் தொடரவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், குறிப்பாக ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும் அதன் முயற்சிகளை ஆதரிப்பதற்கும் தனது உறுதியை வெளிப்படுத்தினார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் ஜப்பான் பொது மற்றும் தனியார் உள்ளிட்ட இருநிறுவனங்களினதும் ஊழலை ஒழிப்பதும் நல்லாட்சியும் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கு ஒரு முன்நிபந்தனை என்று தூதர் இசொமதா தனது கருத்துக்களில் வலியுறுத்தினார். நாட்டின் நிலையான வளர்ச்சிக்காக ஜப்பான் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்து நெருக்கமாகப் பணியாற்றும்.

உரையாடலின் போது, ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி (ODA) மற்றும் அதன் நாட்டு அபிவிருத்திஒத்துழைப்புக் கொள்கையின் கண்ணோட்டத்தை டி.ஜி. இஷிசுகி விரிவாகக் கூறினார், இது இலங்கைக்கான ஜப்பானின் ODA கொள்கையின் திசையை வரையறுக்கிறது.

நடந்து வரும் யென் கடன் திட்டங்களை செயல்படுத்தி இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும் வலுப்படுத்தவும் அதன் சமூகப் பொருளாதார சவால்களை சமாளிக்கவும்இலங்கையுடனான ஜப்பானின் எதிர்கால மேம்பாட்டு ஒத்துழைப்பு குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.




சுவாமி விபுலானந்த அடிகளாரின்

# 78ஆவது மகா சமாதி தினம்



விபுலமாமணி வித்தகர்
வி.ரி.சகாதேவராஜா,
(M.Ed.) ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், விரிவுரையாளர், காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் மற்றும் இந்நாள் ஆலோசகர்.

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 78ஆவது மகா சமாதி தினம் சனிக்கிழமை (19) ஆகும். அதேவேளை, அவர் பண்டிதர் மயில்வாகனாக இருந்து சுவாமி விபுலானந்தரான அதாவது துறவறம் பூண்ட (1924-2024) நூற்றாண்டு விழா பரவலாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் ஓரங்கமாக சனிக்கிழமை(19) அன்று யாழ்ப்பாணத்தில் சுவாமியின் துறவற நூற்றாண்டு விழா ஆரம்பமாகிறது.

## யாழ்ப்பாணத்தில் வரலாறு காணாத முதல் விழா

புத்தசாசன மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் ஆகியன இணைந்து வரலாற்றில் முதல்முறையாக மாபெரும் துறவற நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாட இருக்கிறது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அனிருத்தனனின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜெகத் விக்ரமரத்ன கலந்து சிறப்பிக்க இருக்கிறார்.

மேலும், புத்தசாசன மற்றும் சமய விவரங்களுக்கான அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி மற்றும் பிரதி அமைச்சர் ஹமகெதற திசாநாயக்க ஆகியோரும் கலந்து கொள்கின்றார்கள்.

அத்துடன், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்கள். சனிக்கிழமை (19) அன்று யாழ்ப்பாணம், மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து சுவாமிகளின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்வலம் காலை ஒன்பது மணிக்கு இடம்பெறவுள்ளது.


அதனைத் தொடர்ந்து, மானிப்பாய் ஆலயடிச் சந்தியில் சுவாமிகளின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

அத்துடன், சுவாமிகள் அன்று அதிபராக இருந்த மானிப்பாய் இந்து கல்லூரியில் ஆரம்ப நிகழ்வுகள் காலையில் நடைபெற இருக்கின்றது.

19ஆம் திகதி மாலை நான்கு மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்காதேவி மணிமண்டபத்தில் இசை அரங்கு இடம் பெற இருக்கின்றது.



ஜீலை 1947 காலை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஆஸ்ரம வாயில் தூணைப் பிடித்த காட்சி



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
ஸ்தாபகர்: ராமகிருஷ்ண மிஷன், இலங்கை
Founder:Ramakrishna Mission, Sri Lanka

மறுநாள் 20ஆம் திகதி காலையில் ஆய்வரங்கும் மாலையில் கலையரங்கும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, 19 மற்றும் 20 ஆகிய இரு தினங்களிலும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியக் கண்காட்சி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின கலா மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

## தேசிய இன நல்லிணக்கம்?

இலங்கை எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கம் எது? என்பதை 100 ஆண்டுகளுக்கு முன்பு தெரிவித்தவர் சுவாமி விபுலானந்த அடிகள்.

இலங்கை எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கம் இலங்கையில் கல்விமுறைமை எப்படி அமையவேண்டும்? இனநல்லிணக்கம் தேசியநல்லிணக்கம் எவ்வாறு அமையவேண்டும்? என்பதை இற்றைக்கு 100வருடங்களுக்கு முன்பே ஒரு தீர்க்கதரிசி சொல்லியிருந்தார். அவர்தான் அகிலம் போற்றும் உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகன் சுவாமி விபுலாநந்த அடிகளார். ஆம் உண்மையில் அவர் ஒரு தீர்க்கதரிசி.

அடிகளார் இவ்வவனியில் பிறந்து 133 வருடங்களாகின்றன. அவர் பிறந்தது 1892.03.27 இல். 20ஆம் நூற்றாண்டின் ஈடிணையற்ற பேரறிஞர் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஆவார். அவரது எல்லையற்ற மேதாவிலாசம் காரணமாக உலகின் பல பாகங்களிலும் அவர் பெயரில் பல அமைப்புகள் இயங்கிவருகின்றன.அவருக்காக பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பல ஆய்வரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவர் சிவபதமடைந்தது 19.07.1947இல். தேசிய நல்லிணக்கம் தொடர்பாக சுவாமி விபுலானந்த அடிகளார் அன்று சொன்னது,

“பலமொழிக்கல்வி தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டினுள்ளும் நாடுகளிடையேயும் ஐக்கியத்தையும் உறுதிப்படுத்துகின்றது. சர்வதேச நல்லுறவையும் நன்முறையில் விருத்திசெய்வதற்குப் பல மொழிகளை ஆண்களும் பெண்களும் கற்றல் வேண்டும்” என்றார். பலதரப்பட்ட பாசைகளைக் கற்பதனால் அறிவு விசாலிக்கும் என்றுகூறிய அவர்

பாடசாலைகளில் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு அப்பால் தொழிற்கல்வியையும் வழங்குவதே விரிவுக்கல்வியாகும். நல்லதிடகாத்திரமான உடல்நிலை உவப்பான உளவளர்ச்சி பன்பனவும் கட்டாயமானது என 1941இல் கூறினார்.

அதனால்தான் 1970களில் ஜேவிபி புட்சி அதனைத்தொடர்ந்து பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார் இலங்கைமக்களை நாட்டுப்பற்றுடைய மக்களாக மாற்றவேண்டுமெனின் புதிய கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்றெண்ணி க.பொ.த. சா.த. பரிட்சை நிறுத்தப்பட்டு பதிலாக தேசிய கல்விச்சான்றிதழ் எனும் புதிய பரிட்சை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

முக்கிய பாடங்களுடன் தொழிற்கல்வியும் உடற்கல்வியும் கவின்கலைகளும் கட்டாயபாடமாக்கப்பட்டன. இம்மாற்றம் முழுக்கமுழுக்க விபுலானந்த அடிகளாரின் கல்விச்சிந்தனையில் எழுந்ததே என்பதை யாரும் மறக்கமுடியாது.

விரிவுக்கல்வியில் பெரிதும் நாட்டமுள்ள தாகூர் காந்தி பிறந்த நாட்டினில் இன்னும் விரிவுக்கல்வி நடைமுறையில் இல்லையென்பது இவ்வண் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அப்படி இனங்கள் ஒன்றாக நல்லிணக்கத்துடனும் இனசௌயன்யத்துடனிருக்கவேண்டும் என்பதை அன்றே சிந்தித்தவர் சுவாமிகள். சிங்களமும் இஸ்லாமும் அறபும் சமஸ்கிருதமும் அவர் தோற்றுவித்த கல்லடி சிவானந்தாவில் கற்பிக்க ஏற்பாடுசெய்தவர். காத்தான்குடி முஸ்லிம்மாணவர்களும் பயிலவேண்டுமென்பதற்காக அவர் சிவானந்தாவை கல்லடியில் அமைத்தார்.

சுவாமியின் மகாசமாதி தினம் மற்றும் நூற்றாண்டு தின விழா சிறப்பாக அமைய இறைவனைப்பிரார்த்திப்போம்.

பாக்தாத்

## தீ விபத்து
# 60 பேர் பலி

ஈராக்கில் அல் குட் நகரில் உள்ள ஒரு பல் அடுக்கு கொண்ட வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். இந்த தீ விபத்தை அல் குட் நகர் அமைந்துள்ள வாசிட் மாகாண ஆளுநர் முகமது அல் மியாஹி உறுதிப்படுத்தியுள்ளார்.

"வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 60 ஐ தொட்டுள்ளது. நிறைய பேர் காயமடைந்துள்ளனர். விபத்துக்கான காரணம் உடனடியாக உறுதியாகவில்லை. இன்னும் 48 மணி நேரத்துக்குள் முழு விவரங்கள் பகிரப்படும். இப்போதைக்கு கட்டிட உரிமையாளர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது" என்று ஆளுநர் முகமது அல் மியாஹி கூறியுள்ளார்.



பங்களாதேஷ்

## பங்களாதேஷில் மோதல்:
# 4 பேர் பலி; 50 பேருக்கு காயம்



பங்களாதேஷில் ஷேக் ஹசீனா ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் 4 பேர் உயிரிழந்தனர், 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பங்களாதேஷத்தின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாணவர்கள் நடத்திய போராட்டம் காரணமாக அவர் தனது பதவியை இழந்து, அங்கிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அமைப்பு சார்பில், நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனுஸ் இடைக்கால தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மாணவர்கள் பலர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர்.

பங்களாதேஷத்தின் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய இந்த நிகழ்வு ஓராண்டை நிறைவு செய்ய உள்ளதை முன்னிட்டு, மாணவர்களின் அரசியல் கட்சியான தேசிய குடிமக்கள் கட்சி சார்பில் இந்த மாதத்தில் (ஜூலை) நாட்டின் பல்வேறு பகுதிகளில் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, கோபால்கஞ்ச் நகரில் பேரணி வியாழக்கிழமை (17) அன்று நடத்தப்பட்டது.

ஷேக் ஹசீனாவின் மூதாதையர்கள் வாழ்ந்த நகரமான இது, அவாமி லீக் கட்சியின் கோட்டையாகக் கருதப்படுகிறது. இந்நிலையில், வியாழக்கிழமை (17) காலை பலத்த பாதுகாப்புடன் பேரணி தொடங்கியது. அப்போது, அவாமி லீக் கட்சியினர், வன்முறையில் ஈடுபட்டனர். பல்வேறு வாகனங்களுக்குத் தீ வைத்த அவர்கள், பொலிஸார் மீது தாக்குதல்களை நடத்தினர். அப்போது, இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஐஸ்லாந்து

## எரிமலை வெடிப்பு
# மக்கள் வெளியேற்றம்

ஐரோப்பாவில் அமைந்துள்ள ஐஸ்லாந்து நாட்டில் 100க்கும் மேற்பட்ட எரிமலைகள் உள்ளன. இந்நிலையில் தலைநகர் ரெய்காவிக்கில் இருந்து தென்மேற்கே அமைந்துள்ள ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் புதன்கிழமை(16) அன்று அதிகாலை 4 மணியளவில் எரிமலை வெடித்துச் சிதறியது.

தீவிர நில அதிர்வுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த வெடிப்பு நிகழ்ந்ததாக ஐஸ்லாந்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் மக்களும் சுற்றுலா பயணிகளும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.



எரிமலையில் இருந்து வெளியேறும் லாவா குழம்பு சுமார் 700 முதல் 1,000 மீட்டர் அகலமுள்ள பிளவு வழியாக தென்கிழக்கு நோக்கிப் பாய்ந்து வருகிறது.

சுமார் 800 ஆண்டுகளாக செயலற்று இருந்த இந்த எரிமலைப் பகுதி கடந்த 2023 நவம்பர் முதல் மீண்டும் செய்யப்படத் தொடங்கியது குறிப்பிடத்க்கது.

புதுடெல்லி

# குற்றவாளிகளின் விசா இரத்து

அமெரிக்காவில் குற்றச்செயல்களில் ஈடுபட்டால் விசா திரும்பப் பெறப்படும் என்று இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள டார்க்கெட் ஒன்றில் இந்திய பெண் ஒருவர் சுமார் 7 மணிநேரம் பொருட்களை வாங்குவது போல நடித்து, சுமார் ரூ.1.10 இலட்சம் மதிப்பிலான பொருட்களை திருடிய பின்னர், அங்கிருந்து வெளியேற முயன்றுள்ளார்.

இதையறிந்த ஊழியர்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளார். விரைந்து சென்ற பொலிஸார், அந்தப் பெண்ணிடம் விசாரணை நடத்தியபோது, தான் எடுத்து வந்த பொருட்களுக்கு பணம் செலுத்த அந்தப் பெண் தயாராக இருந்த போதும், பொலிஸாருக்கு அவருக்கு கைவிலங்கிட்டு, பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், குற்ற செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களின் விசா இரத்து செய்யப்படும் என்று இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து விடுத்துள்ள எக்ஸ் தளப்பதிவு,

அமெரிக்காவில் திருட்டு, கொள்ளை, தாக்குதல் போன்ற குற்ற செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், விசாவும் ரத்து செய்யப்படும். எதிர்காலத்தில் அமெரிக்கா நுழைவதற்கான விசாவை பெறும் தகுதியை இழக்க நேரிடும். அமெரிக்காவின் சட்டம் மற்றும் ஒழுங்கை வெளிநாட்டவர்களும் மதித்து, கடைபிடிக்க வேண்டும், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இலங்கைக்கு எதிரான
# தொடரைக் கைப்பற்றியது பங்களாதேஷ்

இலங்கைக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டியை இலங்கையும், இரண்டாவது போட்டியை பங்களாதேஷும் வென்றிருந்த நிலையில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் புதன்கிழமை (16) அன்று நடைபெற்ற மூன்றாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என்ற ரீதியில் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் சரித் அசலங்க தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். இலங்கையணியில் கடந்த போட்டியில் விளையாடிய அவிஷ்க பெர்ணாண்டோ, சாமிக கருணாரத்னவை தினேஷ் சந்திமால், கமிந்து மென்டிஸ் பிரதியிட்டிருந்தனர். பங்களாதேஷில் கடந்த போட்டியில் விளையாடிய மெஹிடி ஹஸன் மிராஸை மஹெடி ஹஸன் பிரதியிட்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஷொரிஃபுல் இஸ்லாம், மஹெடி ஹஸன்(4), ஷமிம் ஹொஸைன், முஸ்தபிசூர் ரஹ்மானிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. பதும் நிஸங்க 46 (39), தசுன் ஷானக ஆ.இ 35 (25) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 133 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், தன்ஸிட் ஹஸனின் ஆட்டமிழக்காத 73 (47), லிட்டன் தாஸின் 32 (26), தௌஹிட் ஹிரிடோயின் ஆட்டமிழக்காத 27 (25) ஓட்டங்களோடு 16.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மஹெடியும், தொடரின் நாயகனாக லிட்டனும் தெரிவாகினர்.

## முத்தரப்புத் தொடர்:
# தென்னாபிரிக்காவை வென்ற நியூசிலாந்து

சிம்பாப்வே பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் புதன்கிழமை (16) அன்று நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

நியூசிலாந்து: 173/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டிம் றொபின்ஸன் ஆ.இ 75 (57), பெவன் ஜேக்கப்ஸ் ஆ.இ 44 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: செனுரன் முத்துசாமி 1/19 [4])

தென்னாபிரிக்கா: 152/10 (18.2 ஓவ.) (துடுப்பாட்டம்: டெவால்ட் பிறெவிஸ் 35 (18), ஜோர்ஜ் லின்டி 30 (20), லுஹான்-ட்ரீ பிறிட்டோறியஸ் 27 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக்கப் டஃபி 3/20 [4], இஷ் சோதி 2/34 [4], மிற்செல் சான்ட்னெர் 1/35 [4])

போட்டியின் நாயகன்: டிம் றொபின்சன்

இந்நிலையில், இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சிம்பாப்வேயை நியூசிலாந்து எதிர்கொள்கிறது.





# ஓய்வு பெறும் ரஸல்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலிரண்டு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுடன் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறைவீரர் அன்ட்ரே ரஸல் ஓய்வு பெறவுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்து இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் மாத்திரமே விளையாடி வரும் 37 வயதான ரஸல், சர்வதேச கிரிக்கெட் சபையின் அடுத்த இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்கு ஏழு மாதங்களிருக்கையில் ஓய்வு பெறவுள்ளார்.

இதுவரையில் ஒரு டெஸ்ட், 56 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 84 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் ரஸல் விளையாடியுள்ளார்.

கடந்த 2012, 2016ஆம் ஆண்டு இருபதுக்கு-20 உலகக் கிண்ணங்களை வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில் ரஸல் இடம்பெற்றிருந்தார்.

பெங்களூரு

## நெரிசலில் 11 பேர் பலி:
# "பெங்களூரு அணியே பொறுப்பு"

கர்நாடகாவில் பிரீமியர் லீக் வெற்றி கொண்டாட்டத்தின் போது, கூட்டநெரிசல் ஏற்பட்டு, 11 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு பெங்களூரு அணி நிர்வாகமே முழு பொறுப்பு என்று கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் அம்மாநில அரசு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் சாம்பியன் பட்டத்தை வென்ற பெங்களூரு அணிக்கு கடந்த ஜூன் 4ஆம் திகதி நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் பங்கேற்ற இலட்சக்கணக்கான ரசிகர்கள் ஒரே சமயத்தில் திரண்டதால் ஏற்பட்ட கூட்டநெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், கூட்டநெரிசல் உயிரிழப்பு தொடர்பில் கர்நாடகா அரசு விசாரணை அறிக்கை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதில், "வெற்றி கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு நிறுவனம், பொலிஸாரை தொடர்பு கொண்டு, வெற்றி விழா குறித்து தகவல் தெரிவித்தது. இருப்பினும், அதிகாரப்பூர்வ அனுமதி கோரவில்லை. 2009 பெங்களூரு நகர ஆணையின் படி, கட்டாய அனுமதி தேவை. இதனால் விழாவிற்கு பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

பொலிஸார் அனுமதி மறுத்த நிலையிலும், 'ரசிகர்கள் கொண்டாட்டத்திற்கு வாருங்கள், இலவச அனுமதி' என்று பெங்களூரு அணி நிர்வாகம், சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்தது. அதுமட்டுமில்லாமல், அந்த அணியின் நட்சத்திர வீரர் கோலியும், வீடியோ மூலம், ரசிகர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இலவச அனுமதி என்று கூறியதால், ஒரே சமயத்தில் 3 இலட்சம் பேர் குவிந்தனர். ஆனால், ஜூன் 4ஆம் திகதி மதியம் 3.14 மணியளவில், 'மைதானத்திற்குள் நுழைய பாஸ் தேவை' என்று நிகழ்ச்சி ஏற்பட்டாளர்கள் திடீரென அறிவித்தனர்.



இதனால், ரசிகர்களின் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. பெங்களூரு அணி நிர்வாகம், கர்நாடகா கிரிக்கெட் சங்கம் மற்றும் டி.என்.ஏ., இடையே மோசமான ஒருங்கிணைப்பு இருந்தது. நுழைவு வாயிலில் போதிய திட்டமிடல் இல்லாதது உள்ளிட்ட காரணங்களால் கூட்டநெரிசல் ஏற்பட்டது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

## துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில்
# முதலாமிடத்துக்கு முன்னேறிய றூட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஜோ றூட் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 144 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 53 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித், ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. கேன் வில்லியம்சன், 3. ஹரி ப்றூக், 4. ஸ்டீவன் ஸ்மித், 5. யஷஸ்வி ஜைஸ்வால், 6. தெம்பா பவுமா, 7. கமிந்து மென்டிஸ், 8. றிஷப் பண்ட், 9. ஷுப்மன் கில், 10. ஜேமி ஸ்மித்.



மேற்குறிப்பிட்ட மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் ஸ்கொட் போலண்ட், 12ஆவது இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜஸ்பிரிட் பும்ரா, 2. ககிஸோ றபாடா, 3. பற் கமின்ஸ், 4. ஜொஷ் ஹேசில்வூட், 5. நொமன் அலி, 6. ஸ்கொட் போலண்ட், 7. மற் ஹென்றி, 8. நேதன் லையன், 9. மார்கோ ஜன்சன், 10. மிற்செல் ஸ்டார்க்.

இந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்டில் 27 ஓட்டங்களைப் பெற்றதோடு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணித்தலைவர் பற் கமின்ஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2.மெஹிடி ஹஸன் மிராஸ், 3.வியான் முல்டர், 4.பற் கமின்ஸ், 5. மார்கோ ஜன்சன்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 17, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.